முருகப்பெருமான் துணை

**மகான் திருஞானசம்பந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.03.2024**, வெள்ளிக்கிழமை

1. பிரணவக் குடில் படைத்து அருளும்
பிரணவ சித்திமிகு ஆறுமுக அரங்கனே
சரவணச் சுடரேற்றி அருளும்
சற்குருவே உன்பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா சோபகிருது சால்திங்கள்
அறிவிப்பேன் மூவாறு திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 18 ம் நாள், 01.03.2024, வெள்ளிக்கிழமை)
ஆற்றல்பட திருஞானசம்பந்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை நெறி சைவ நெறியே
ஞானவழியென அருளுகின்ற
ஞானியர் வழிகாட்டல் ஏற்று
4. ஏற்றுமே ஞானம் பயில
எந்நாளும் செபதப முறை
ஆற்றல்பட செய்து வருக
ஆறுமுகப் பெருமான் அனுகூலம்
5. அனுகூலம் அனுகி உலகோர்
அச்சமற ஞானத் தேற்றம்
ஞான தேசிகனார் வழி காட்டலில்
நம்பிக்கைபட மக்கள் அடைவர்
6. அடையவே நெறி தவறி செல்லா
ஆசாபாச தீவழி அகப்படா
தடையற தயவு தரும சிந்தைபட
தான்வந்த பிறவி நோக்கம்
7. நோக்கம் அவரவரும் உணர்ந்து
நீதி நெறிபட வாழ்க்கை முறை
ஆக்கமுடன் செய்து தருமசேவை
அளவிலா ஆற்றிச் சிறந்து

8. சிறந்துமே ஞானவான்களாகவே
சித்தநெறி கூடி தன்நிலை
அருந்தவசி ஆற்றலுள் கலந்திட
அனைவரும் மனிதநிலை கடந்து
9. கடந்துமே மகான்களாகவே
கலியிடரை போக்குகின்ற
தடையற ஞானயுகம் படைக்கின்ற
தவசிகளாக நிலை உயர்ந்து
10. உயர்ந்துமே அரங்க மகானின்
உலகினில் அவதார மகிமை
உயர்வானது எனும் தெளிவு கிட்டி
உலகமாற்றத்தின் முனைப்புகளில் பங்கு
11. பங்களிப்பு பூரணமாகச் செய்து
பாருலகே வியக்க மாற்றத்தை
ஓங்காரம்பட நடத்தி முடிப்பர்
ஓதிவந்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—